ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்யதர்மம்.

क्वचिद्बालैस्सार्धं करतलजतालैस्सहसितैः
  क्वचित्तारुण्यालंकृतनरनरीभिस्सह रमन् ।
क्वचिद्वृद्धैश्चिन्ताकुलितहृदयैश्चापि विलपन्
  मुनिर्न व्यामोहं भजति गुरुदीक्षाक्षततमाः ॥ आनन्दलहरी ॥

க்வசித்பாலைஸ்ஸார்தம் கரதலஜதாலைஸ்ஸஹஸிதை:
க்வசித்தாருண்யாலங்க்ருதநரநரீபிஸ்ஸஹ ரமந் ।
க்வசித்வ்ருத்தைச்சிந்தாகுலிதஹ்ருதயைச்சாபி விலபந்
முநிர்ந வ்யாமோஹம் பஜதி குருதீக்ஷாக்ஷததமா: ।
ஆநந்தலஹரீ ।

ஒரு ஸமயம் சிறுபையன்களுடன்கூட சந்தோஷத்தையடைந்து தம் கைகளால் தாளம்போட்டுக்கொண்டு விளையாடுகிறவரும் பின்னொருஸமயம் யுவாக்களான ஸ்திரீகள், புருஷர்கள், இவர்களுடன் கிரீடிப்பவரும் மற்றொரு காலம் பலவித சிந்தைகளால் பீடிக்கப்பட்ட ஹிருதயத்தையுடைய அதிகவயதுசென்ற பெரியோர்களுடன் சேர்ந்து பலவாராகப் புலம்புகிறவருமான முனியானவர் ஆசார்யாளுடைய அனுக்கிரகபலத்தால் விலக்கப்பட்ட அக்ஞானத்தை யடையவராய்க்கொண்டு ஒன்றிலும் பற்றுதலை யடையமாட்டார்.

குரு கருணையால் அக்ஞானத்தை அறவேயொழித்துச்சிறந்தஞானம் பெற்று ஆத்ம வித்தாய் விளங்கும் ஒரு மஹானுடைய நிலைமையையறிவிக்கிறார்.

இவ்வித மஹான் ஸ்படிகம்போன்ற சுத்தமான நிலைமையிலிருப்பார் ஸ்படிகமானது யாதொரு கல்மஷமுமில்லாமலிருந்துகொண்டு எங்கெந்த ஸமயத்தில் எக்கெந்த வஸ்துக்களின் சேர்க்கை நேருகின்றதோ அததின் குணத்தைத்தானும் அடைந்திருப்பதுபோல் பார்க்கிறவர்களுக்குத் தோற்றத்தையுண்டுபண்ணி அந்த வஸ்த்துக்கள் விலகியபிறகு சுத்தமான தம் நிலைமையுடனெப்படி விளங்குமோ இவ்விதமே தம்மிடம் வரும் மனிதர்களின் நிலமைக்குற்றவாறு பலமாதிரியாக இருப்பவராகத் தோன்றும் ஆத்மவித்தானவர் முடிவில் இயற்கையான தம் சுத்த ரூபத்தோடு தான் விளங்குவார். அக்ஞானத்தின் வாஸனை அற்பமேனும் அவரிடம் அணுகாது.

உபபத்திராதிபர்.

19

ஆர்ய தர்மம்.
க்ஷய வருஷ பங்குனி-மீ௳ ௧௧௨

# பதிவிரதா ஸ்திரிகள் இருக்க வேண்டிய முறை

भुक्ते भुङ्क्तेऽथ या पत्यौ दुःखिते दुःखिता च या ।
मुदिते मुदितात्यर्थं प्रोषिते मलिनाम्बरा ॥
सुप्ते पश्चाच्च या शेते पूर्वमेव प्रबुध्यते ।
नान्यं कामयते चित्ते सा विज्ञेया पतिव्रता ॥

புக்தே புங்க்தேऽத யா பத்யௌ து:கிதே து:கிதா ச யா ।
முதிதே முதிதாத்யர்த்தம் ப்ரோஷிதே மலினாம்பரா ॥
ஸுப்தே பச்சாச்ச யா சேதே பூர்வமேவ ப்ரபுத்யதே ।
நாந்யம் காமயதே சித்தே ஸா விஜ்ஞேயா பதிவ்ரதா ॥

எந்த ஸ்திரீயானவள் தன்பதி புசித்தபிறகே தான் புசிக்கிறாளோ, பதி துக்கத்துடனிருந்தால் தானும் துக்கத்துடனிருக்கிறாளோ, பதி சந்தோஷத்தை அனுபவிக்கும்கால் தானும் அனுபவிக்கிறாளோ, பதி வெளியிற் சென்றிருந்தால் அக்காலத்தில் அழுக்கடைந்த பழைய வஸ்திரத்தை தரிக்கின்றாளோ, பதி தூங்கின பிறகும் தூங்குகிறவளும், முந்தி விழித்துக் கொள்கிறவளுமாக யிருக்கிறாளோ, எவள் பதியைத்தவிரமற்றொருவனை மனத்தாலும் விரும்பாமலிருக்கிறாளோ அவள்தான் பதிவிரதையாக அறியப்படுகிறாள்.

भक्तिं श्वशुरयोः कुर्यात् पत्युश्चापि विशेषतः ।
धर्मकार्यानुकूलत्वमर्थकार्येषु संयमम् ॥
मङ्गलं सम्मतं पत्युः सततं प्रियभाषणम् ।
भाव्यं मङ्गलकारिण्या गृहमण्डनशीलया ॥

𑌭𑌕𑍍𑌤𑌿𑌂 𑌶𑍍𑌵𑌶𑍍𑌰𑍂𑌶𑍍𑌵𑌶𑍁𑌰𑌯𑍋𑌃 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 𑌪𑌤𑍍𑌯𑍁𑌶𑍍𑌚𑌾𑌪𑌿 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ।
𑌧𑌰𑍍𑌮𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌨𑍁𑌕𑍂𑌲𑌾𑌰𑍍𑌥𑌵𑍍𑌯𑌯𑌕𑌾𑌰𑍍𑌯𑍇𑌷𑍁 𑌸𑌂𑌯𑌤𑌾 ॥
𑌮𑌙𑍍𑌗𑌲𑌂 𑌸𑌜𑌤𑌂 𑌪𑌤𑍍𑌯𑍁𑌃 𑌸𑌤𑌤𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌸𑌾𑌧𑌿𑌨𑍀 ।
𑌭𑌾𑌵𑍍𑌯𑌂 𑌮𑌙𑍍𑌗𑌲𑌕𑌾𑌰𑌿𑌣𑍍𑌯𑌾 𑌗𑍃𑌹𑌮𑌣𑍍𑌡𑌨𑌶𑍀𑌲𑌯𑌾 ॥

தன்னுடைய மாமனார், மாமியார், இவர்களிடமும், பர்த்தாவிடமும், அதிக பக்தியுடனிருக்கவேண்டும் தன்பதியால் அநுஷ்டிக்கப்படும் தர்ம்மகார்யத்திற்கு அநுகூலமாகவும் பொருளைச் செலவு செய்து நடத்தும் காரியங்களில் ஜாக்கிரதையாகவும் பர்த்தாவுக்கு திருப்திகரமானகார்யத்தைச் செய்கிறவளாகவும் கிருஹத்திற்கு லக்ஷ்மீகரமான அலங்காரங்களைச்செய்கின்றவளாகவும் இருக்கவேண்டும்.

गृहोपस्करसंस्कारज्ञातायाप्रतिवासरम् ।
क्षेत्राद्वनाद्वा ग्रामाद्वा भर्तारं गृहमागतम् ॥
प्रत्युत्थायाभिनन्देच्च स्वासनेनोदकेन च ॥

𑌗𑍃𑌹𑍋𑌪𑌸𑍍𑌕𑌰𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌜𑍍𑌞𑌾𑌤𑌾𑌯𑌾𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑌾𑌸𑌰𑌮𑍍 ।
𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌾𑌦𑍍𑌵𑌨𑌾𑌦𑍍𑌵𑌾 𑌗𑍍𑌰𑌾𑌮𑌾𑌦𑍍𑌵𑌾 𑌭𑌰𑍍𑌤𑌾𑌰𑌂 𑌗𑍃𑌹𑌮𑌾𑌗𑌤𑌮𑍍 ॥
𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌤𑍍𑌥𑌾𑌯𑌾𑌭𑌿𑌨𑌨𑍍𑌦𑍇𑌚𑍍𑌚 𑌸𑍍𑌵𑌾𑌸𑌨𑍇𑌨𑍋𑌦𑌕𑍇𑌨 𑌚 ॥

வீட்டுக்குவேண்டிய ஸாமான்களையும் வீட்டை சுத்தம்பண்ணவேண்டியவிஷயத்தையும் ஒவ்வொருதினமும் கவனிக்கிறவளாயும் தன் பதி வயல்களிலிருந்தோ தோட்டங்களிலிருந்தோ கிராமங்களிலிருந்தோ கிருஹத்தையடைந்தால் எதிர்கொண்டழைத்துச் சிறந்த ஆஸனத்தையும் தீர்த்தம் முதலானவைகளையும் அவனுக்குக்கொடுத்து ஸந்தோஷத்தையடையும்படி செய்யவேண்டும்.

गुरूणां पुत्रमित्राणां बन्धूनां कर्मकारिणाम् ।
आहूतानां च भृत्यानां दासीदासजनस्य च ॥
अतिथ्यभ्यागतानां च भिक्षुकाणां च लिङ्गिनाम् ।
आसने भोजने दाने सम्माने प्रियभाषणे ॥
तत्तद्गुणानुसारेण प्राप्ते काले यथोचितम् ।
दक्षया सर्वदा भाव्यं भार्यया गृहमुख्यया ॥

𑌗𑍁𑌰𑍂𑌣𑌾𑌂 𑌪𑍁𑌤𑍍𑌰𑌮𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌬𑌨𑍍𑌧𑍂𑌨𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌕𑌾𑌰𑌿𑌣𑌾𑌮𑍍 ।
𑌆𑌹𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌭𑍃𑌤𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌦𑌾𑌸𑍀𑌦𑌾𑌸𑌜𑌨𑌸𑍍𑌯 𑌚 ॥
𑌅𑌤𑌿𑌥𑍍𑌯𑌭𑍍𑌯𑌾𑌗𑌤𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌭𑌿𑌕𑍍𑌷𑍁𑌕𑌾𑌣𑌾𑌂 𑌚 𑌯𑍋𑌗𑌿𑌨𑌾𑌮𑍍 ।
𑌆𑌸𑌨𑍇 𑌭𑍋𑌜𑌨𑍇 𑌦𑌾𑌨𑍇 𑌸𑌮𑍍𑌮𑌾𑌨𑍇 𑌪𑍍𑌰𑌿𑌯𑌭𑌾𑌷𑌣𑍇 ॥
𑌤𑌤𑍍𑌤𑌦𑍍𑌗𑍁𑌣𑌾𑌨𑍁𑌸𑌾𑌰𑍇𑌣 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇 𑌕𑌾𑌲𑍇 𑌯𑌥𑍋𑌚𑌿𑌤𑌮𑍍 ।
𑌦𑌕𑍍𑌷𑌯𑌾 𑌸𑌰𑍍𑌵𑌦𑌾 𑌭𑌾𑌵𑍍𑌯𑌂 𑌭𑌾𑌰𑍍𑌯𑌯𑌾 𑌗𑍃𑌹𑌕𑌰𑍍𑌮𑌵𑍍𑌯𑌯𑌾 ॥

குருக்களுக்கும், புத்திர மித்திரர்களுக்கும், பந்துக்களுக்கும், வீட்டில் வேலைசெய்கிறவர்களுக்கும், வெளியிலிருந்து அழைக்கப்பட்ட பிருத்யர்களுக்கும் அதிதியாக வந்தவர்களுக்கும் ஸந்யாஸிகளுக்கும் மற்றுமுள்ள கிருஹஸ்தன் முதலானவர்களுக்கும் ஆஸநம் கொடுப்பதிலும் ஸாப்பாடு போடுவதிலும் தாநம் கொடுக்கும் பொழுதும் ஸம்மானம் செய்யும்பொழுதும் பிரியமானவார்த்தைகள் பேசும்பொழுதும் அவரவர்களுடைய குணத்தையனுஸரித்து உசிதம்போல் எப்பொழுதும் மிகவும் ஸாமர்த்தியமுள்ளவளாகவும் கிருஹகார்யங்களில் கவனமுள்ளவளாகவும் இருக்கவேண்டும்.

गृहव्ययाय यद्द्रव्यं दिशेत्पत्न्याः करे पतिः ।
निर्वृत्य गृहकार्यं सा किंचिद्बुद्ध्यावशेषयेत् ॥
दानार्थमर्पिते द्रव्ये लोभात्किञ्चिन्न धारयेत् ।
भर्तुराज्ञां विना नैव स्वबन्धुभ्यो दिशेद्धनम् ॥

𑌗𑍃𑌹𑌵𑍍𑌯𑌯𑌾𑌯 𑌯𑌦𑍍𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌂 𑌦𑌿𑌶𑍇𑌤𑍍𑌪𑌤𑍍𑌨𑍍𑌯𑌾𑌃 𑌕𑌰𑍇 𑌪𑌤𑌿𑌃 ।
𑌨𑌿𑌰𑍍𑌵𑍃𑌤𑍍𑌯 𑌗𑍃𑌹𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌸𑌾 𑌕𑌿𑌂𑌚𑌿𑌦𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾𑌵𑌶𑍇𑌷𑌯𑍇𑌤𑍍 ॥
𑌦𑌾𑌨𑌾𑌰𑍍𑌥𑌮𑌰𑍍𑌪𑌿𑌤𑍇 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑍇 𑌲𑍋𑌭𑌾𑌤𑍍𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌨𑍍𑌨 𑌧𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ।
𑌭𑌰𑍍𑌤𑍁𑌰𑌾𑌜𑍍𑌞𑌾𑌂 𑌵𑌿𑌨𑌾 𑌨𑍈𑌵 𑌸𑍍𑌵𑌬𑌨𑍍𑌧𑍁𑌭𑍍𑌯𑍋 𑌦𑌿𑌶𑍇𑌦𑍍𑌧𑌨𑌮𑍍 ॥

வீட்டுச்செலவிற்காக தன் பதியால் கொடுக்கப்பட்ட பொருளில் வீட்டுச் செலவைச் செய்துகொண்டு, தன் புத்தியால் அந்தப் பொருளில் அற்பம் பாக்கியும்வைத்துக்கொள்ளவேண்டும் தானத்திற்காகக் கொடுக்கப்பட்ட பொருளில் லோபத்தால் சில பாகத்தை வைத்துக்கொண்டு பாக்கியைக் கொடுக்காமல் பூராவையும்

கொடுத்துவிடவேண்டும். பர்த்தாவின் ஆக்ஞையின்றி தன் பந்துக்களையும்பொருட்டுத்தானாக தனம் முதலியவைகளைக் கொடுக்கக் கூடாது.

உபபத்திராதிபர்.

---

# அமரகலாவிலாஸினீ ஸபையின் கண்டனம்.

சென்னை அமரகலாவிலாஸினீ ஸபையினாதரவில் மஹாசிவராத்திரியன்று மாலை சாந்தாச்சரமத்தில் ஓர் மஹாநாடு கூடியது. ப்ரஹ்மஸ்ரீ ஸோமதேவ சர்மா தலைமை வகித்து சிவராத்திரியின் மஹிமையைவிளக்கி இச்சமயத்தில் சிவபிரானருளால் நமதுமதத்திற்கு நேர்ந்ததீங்குகளை அகற்ற வழிதேடவேண்டுமென்றார். பின்னர் பலபெரியார்கள் கீழ்கண்ட தீர்மானங்களைப்பற்றி விரிவாகப் பேசி ஏகமனதாக அவைகளை நிறைவேற்றி அவரவர்களுக்கும் இதையனுப்பினார்கள்.

(1) டில்லிசட்டசபையில் கோர்முதலியவர்கள் அஸவர்ண விவாஹத்தையும் ஸ்திரீகள்ஸம்மதவயதைப் பற்றியுங்கொண்டுவரும்தீர்மானங்கள் முற்றிலும் சாஸ்திரவிரோதமானது. மதத்திற்கு முரண்பட்டது. தேசத்திற்கு விபரீதபலனை அளிப்பது, விக்டோரியாவின் வாக்கிற்குமாறானது. ஆதலால் அதை பலமாகக் கண்டித்து ஆயிரக்கணக்கான கையெழுத்துகள் வாங்கி வைசிராயுக்கு அனுப்பத் தீர்மானிக்கிறது.

(2) ஆரியசமாஜத்தார் சென்னைக்குவந்து விதவாவிவாஹத்தைப்ரசாரிக்கச்செய்யும் ஏற்பாடுகள் சாஸ்திரவிரோதமானதெனக் கண்டிப்பதோடு தென்னாட்டிற்குள்ள கீர்த்தியைக்காக்க இது போன்ற இயக்கங்களுக்கு இடமளிக்காமலிருக்கும்படி தென்னிந்தியவாஸிகளை வேண்டுகிறது.

(3) "இண்டியன்மித் அண்ட் விஜண்ட்" என்ற பெயருடன் ஸ்ரீமத்ராமாயணத்தை ஆங்கிலத்தில்வெளியிட்டுவரும் 'டொனால் மேகனேஸ் என்ற ஆங்கிலவித்வான் ஸ்ரீஸீதாபஹரணம் என்பதை

ஸீதையின் பலாத்கார— என்ற ஆபாஸமான வார்த்தைகளால் வர்ணித்து ஸ்ரீ ஸீதாதேவியின் பாதிவ்ருத்யத்தை பிறர்பழிக்கும்படி எழுதியதை இம்மகாநாடு மிக ஆத்திரத்தோடு கண்டிப்பதோடு அதைப்ரசுரிப்பதால் இந்தியருக்குள்ள மனவருத்தத்தை இந்தியமந்திரிக்கு அறிவிக்கிறது. அதைப்பரவாமல் தடுக்கமுயற்சி எடுத்துக்கொள்ளும்படி அவரை வேண்டுகிறது.

(4) பிரும்மஸ்ரீ. ஸி. ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்கார் அவர்களின் தேசோபகாரத்தைப்போற்றி அவர் எழுதிவரும் ஸ்ரீமத்ராமாயணமொழிபெயர்ப்பில் "வாலிவதம்" தவறு என்பதுபோன்ற பங்தியை யகற்றும் அவர் ஸொந்த அபிப்ராயங்களை இதில் சேர்க்காமல் தனிநூலாக வெளியிடும்படி வேண்டுகிறது.

தயைசெய்து இவைகளைப்ரசுரிக்கும்படி மிகவணக்கத்துடன் வேண்டுகிறோம்.

154, தம்புசெட்டிவீதி சென்னை

தீ. ரமநாதன்
காரியதரிசி.

# ஆன்ஹிகக்ரமம்.

(கசo-வது பக்கத்தொடர்ச்சி)

## * அர்க்யப்ரதாநம்.

இக்கர்மாவும் இதற்கடுத்துவரும் தியாநமும் ஸந்தியாகர்மாவில் உயிர்களெனத்தக்கவை. ஏனையவை உடலும் அவயவங்களுமாம் காயத்ரியே யாஜுஷர்களுக்கு அர்க்யப்ரதாந மந்திரமாகும். காயத்ரீ ஸர்வவேதாந்தங்களாலும் போற்றப்படும் பரம்பொருளைப்போற்றுகிறது. சிஷ்ட ஸம்ப்ரதாயப்படி ஆசாரியமூலம் அதன் அர்த்தமுணர்வது உசிதமாகும். காலையில் மூன்று அர்க்யம் நின்றுக்கொண்டு கிழக்குமுகமாகக் கைக்கட்டவிரல்களைச் சேர்க்

*நித்யோபாஸநம் என்ற எமது சிறுநூலில் விசாலமாக வரையப்பட்டுளது. ஆர்யதர்மம் சந்தாதாரர்களுக்குப் பாதிவிலைக்கு அளிக்கப்போவதால் ஸந்தியைப்பற்றி மிகச்சுருக்கமாகவே அவசியமானதிங்கு கூறப்பட்டிருக்கின்றது.

காமல் குதிகாலைத்தூக்கி ஜலத்தில் கொடுக்கவேண்டும். பிறகு காலாதீதப்ராயச்சித்தமாக மற்றோர்க்யமும் கொடுக்கவேண்டும். காணாமல் (காலையிலும்) கோணாமல் (பகலிலும்) கண்டு (ஸாயங்காலமும்)கொடுக்கவேண்டியது விதி. ஒருஸமயமும் தவறாமல் அப்படியே கொடுக்கிறோமெனக்கூறமுடியாது. காலத்திற்கு முந்தியும் செய்யநேரும். ஆதலால் நித்யமும் அர்க்யப்ரதானத்துடன் ப்ராயச்சித்தார்த்தமொன்றும் செய்வதுவழக்கம். இதேபோல் ஸாயங்காலத்திலும் நாலுகொடுக்கவேண்டும். பகலில் இரண்டும் ப்ராயச்சித்தார்த்தமொன்றுமாக மூன்றளிக்கவேண்டும். ஸந்தியை என்பது இரண்டுகாலங்களுக்கே நேராகப்பொருள்படும். லக்ஷணையாக மத்யான்ஹத்திற்கும்பொருந்தும். காலைமாலைகளில் கிரணங்கள் குறைந்து பகவான் பாலனாகவும் விருத்தனாகவுமிருப்பதால் நடுவில் பூர்ணபலத்துடன் யுவாவாக யிருப்பதாலும் கீழ்சொன்ன அசுரர்களுடன் போர்புரிய அஸமர்த்தராகவும் ஸமர்த்தராகவுமிருக்கலாம். அந்தந்த ஸமயத்திற்கேற்றபடி நமது அர்கயவஜ்ரத்தை அளித்து உபகரிக்கிறோம். அல்லது சாஸ்திரம் சொன்னபடி அர்க்யமளிப்பதே கடமையாகும். ப்ரதானமும் நித்யமுமானதால் இவ்வர்க்யப்ரதானத்தை மிகசிரத்தையுடன் காலந்தவறாமல் செய்யவேண்டும். பாரதப்போரில் பீஷ்மாதிகள் ஸந்தியாகாலத்தில் மாநஸிகமாகச் செய்து மண்ணால் அர்க்யம்கொடுத்தனரென்றால் அதன் அவசியம் எவ்வளவெனத்தெரிகின்றது.

## தியானம் தர்ப்பணம்.

ஸந்தியையில் ஸம்ப்ரதானமானது தியானம். அர்க்யத்தினால் சூர்யசத்ருக்களை மந்தேஹாருணமெனும் தீவில் எரிந்தோம். அவர்களைக் கஷ்டப்படுத்திய பாபத்திற்கு ப்ராயச்சித்தமாக ப்ரதக்ஷிணம் செய்யவேண்டும். இது பூப்ரதக்ஷிணமாதயால் ஜலத்திலிருந்து சுத்தக்கூடாது. தன் தலையைமாத்திரம் ஜலத்தால் சுற்றிவிடுவதும் போதாது. கரையிலேறி இரண்டு கரங்களாலும் ஜலத்தைத் தன்னுடன் ப்ரதக்ஷிணமாகச்சுற்றி ப்ராணாயாமம் செய்யவேண்டும். அதன்பிறகு தியானம்செய்யும்படி விதி. மநதிலுள்ள மற்ற எண்ணங்களைக் களைந்துதான் எதிரில் காணும் ஸகலவஸ்துக்களையும் தன்னுள்ளே அடக்கிய பிரமனை சூர்யனிடத்தும் அவனைத் தன்னிடத்தும் அபேதமாக நினைத்தலே தியானமாகும்,

அதே ஸத்யவஸ்து. மற்றவை மறியக்கூடியவை என்றெண்ண வேண்டும். ஸகலவேதவேதாங்கங்களும் உபநிஷத்துகளும் இதைப் போதிக்கவே முயற்சிக்கின்றன. பரமார்த்தமான அன்னிலேயே ஜீவராசிகளின் முழு முதற் நோக்கமாகும். மோக்ஷமெனும் அந்த ஆநந்த நிலைக்கே இச் சந்தியா முதலிய ஸகல நித்ய நைமித்திக கர்மாக்களும் பரம்பரையாகக் காரணங்களாகின்றன. பிறகு ஆசமநம் செய்து ஆதித்யாதி நவக்கிரஹங்களுக்கும்கேசவாதித்வாதச நாமமுள்ள மஹாவிஷ்ணுவுக்கும் ஜலதர்ப்பணம் செய்து ஆசமனீயத்துடன் ஸந்தியையைப்பூர்த்தி செய்துகொண்டு சுத்தமானவிடத்தில் ஜலத்தை ப்ரோக்ஷித்து

## ஜபம்

செய்ய ஆரம்பிக்கவேண்டும். இதில் ப்ராணாயாமம் காயத்ரீஜபம் உபஸ்தானம் என்ற மூன்றும் ப்ரதானங்களாம். இதற்கும் பூர்வாங்க உத்திராங்கங்களுண்டு. நெற்றிக்கணிந்து ஆஸநத்தை சுத்தி செய்ய அதற்கென விதிக்கப்பட்டுள்ள சுலோகங்களைக் கூறி ஜபத்திற்கு விக்னம் செய்யக்கூடிய பூத பிசாச ராக்ஷஸர்களை விரட்டவேண்டும். ப்ராம்மண பிருஷ்டம் சங்கம் இவைகள் பூமியில் வைக்கத்தக்கதல்ல. ஆதலால் கீழே தர்ப்பாஸனம். அதன்மேல் கிருஹஸ்தனானால் வியாக்ராஜிநம். பிரம்மசாரியும் யாகம் செய்த கிருஹியும் கிருஷ்ணாஜிநம். அதன்மேல் வஸ்திரம் இவைகளைப் போட்டு உட்கார வேண்டும். கிடைக்காவிடில் இரும்பாணியில்லாத பலகையாவது போட்டு உட்காரவேண்டும். பூமியில் ஆகர்ஷண சக்தியிருப்பதால் நமது ஆத்ம சக்தியை அது ஆகர்ஷிக்காவண்ணம் ஆஸநம் அவசியமாகும். மரம், தர்ப்பை, தோல் இவைகள் அச்சக்தியை கீழே இரங்கவிடாமல் தடுக்கின்றன. முன்கூறியபடி ஜபத்திற்கு ஸங்கல்பம் செய்துக்கொண்டு ப்ராணாயாமத்திற்கு ரிஷி (தலை) சந்தஸ் (நாஸாக்ரம்) தேவதை (மார்) இவைகளை அந்தந்த விடங்களில் தொட்டுச்சொல்லவேண்டும்.

## ப்ராணாயாமம்.

ப்ராணாயாம மந்திரத்தில் நாலு மந்திரங்களிருக்கின்றன. ப்ரணவம் ஸப்தவ்யாஹ்ருதிகள், காயதரீ, காயத்ரீசிரஸ், என்பனவாம், இவைகளுக்கு க்ரமப்படி ரிஷி சந்தஸ் தேவர்களைக் கூறி

ப்ராணுபாமம் செய்யவேண்டும். தற்பொழுது பத்துமுறை மந்திரங்களை ஜபித்து நிறுத்தும் வழக்கம் பலரிடமு மிருக்கிறது. அது அசக்தருக்காக ஏற்பட்டவிதி மந்திரார்த்தத்தைத் தியானம்செய்து கொண்டே ஜபிப்பது ஸகர்ப்பமென்றும் கேவலமந்திரத்தை ஜபிப்பது அகர்ப்பப்ராணுபாமமென்றும் கூறப்படும். ஆந்தாமலங்களை யகற்றுவது இதின் முதல் பிரயோஜநம், கேவல மந்திரத்தைமாத்திரம் ஜபிப்பது நாடிகளுக்குள் நுழைந்து ஆங்குள்ள மலங்களைய கற்றும். முழுப்பயனைக் கொடுக்காது. ஆதலால் விதிப்படி ப்ராண வாயுவை உள்ளேயடக்கி அதை அந்வர்த்தமாக அநுஷ்டிக்க வேண்டும். பூரகம் கும்பகம் ரேசகம் என்ற மூன்று அங்கமுள்ளது ப்ராணுயாமம், இடை என்ற இடது நாஸிகையால் மெதுவாக சுவாஸத்தை உள்ளே இழுக்கவேண்டும். அதற்குள் ஒரு முறை மந்திரா நு ஸந்தாநம் செய்யவேண்டும். ஸுஷும்னை என்ற நாடியில் வாயுவை நிறுத்தி அர்த்தாநுஸந்தானம் செய்யும்போது ஒருமுறை ஜபித்தல். மெதுவாக வலது நாஸாவழியாக( பிங்கலை) விடும்போது ஒருமுறை ஜபம். ஆகமுறையே பூரக கும்பகரேசகம் எனும் மூன்று லக்ஷணங்களுடன் ஓர் பிராணுயாமமாகும். இதுபோல் மூன்று செய்யவேண்டும், இழுக்கும்போதும் விடும்போதும் மந்திரஜபம் செய்யாமல் கும்பகத்தில் ஜபிப்பது அப்யஸிப்பவருக்கு அநுகூலமானது. வாயுவை இழுக்கும் போதும் விடும்போதும் அதிமிருதுவாக சப்தமில்லாமலிருக்க வேண்டும். உள்ளடக்கிய வாயுவிலிருந்து ஓர் அப்ராகிருத அக்னியும் அதிலிருந்து ஓர் ஜலமும் உண்டாகி ஒவ்வொரு நாடியையும் சுத்தம் செய்கிறது. முறையே பிரும்ம விஷ்ணு ருத்ரர்களையும் தியானிக்கவேண்டும்.

இப்ராணுபாமத்தால் ஆயுள் விருத்தியாகிறது. நமக்கு ஈசனளித்த ஆயுள் வருஷக்கணக்கால் ஏற்பட்டதல்ல. நாம் ஒரு நாள் விடும் மூச்சைக் கணக்கிட்டு இவ்வளவு மூச்சென விதிக்கப்பட்டுளது. இதைச்சரிவாக் கணக்கிட்டு நூறு வயதென வேத புராணங்கள் கூறுகின்றன. ஒருநாளில் செலவு செய்ய வேண்டியதற்கதிகமாகச் செலவு செய்வதால் அல்பாயுளையும் செலவு செய்யாமல் பிராணுபாமத்தால். அடக்கி அற்பமாகச் செய்வதால் ஆயுஸ் விருத்தியுமாகிறது, ஆதலால்தான் ஏக்கர்மாவிற்கும் ப்ராணு

யாமம் அடிக்கடி விதிக்கப்பட்டுளது. மலச்சிக்கல் முதலிய பல வியாதிகளும் நீங்குகின்றன. மனோபலத்தை ரத்த சுத்தியை யளித்து பலத்தை விருத்தி செய்வது ப்ராணாயாமம்.

## காயத்ரீஜபம்.

காயத்ரீதேவிஎன ஸகுணமாகப் பூஜிப்பவருக்கும் வைராக்ய ஸம்பன்னர்களுக்கு அகண்டாகாரஸச்சிதாநந்தப்பொருளெனவுங் கூறப்படுகிறது. இதற்கும் ரிஷிமுதலியவைகளைக்கூறி ஆவாஹநம் செய்து ஜபிக்கவேண்டும். ஆவாஹநத்திற்கும் விஸர்ஜநத்திற்கும் வேதமந்திரமே முன்னும்பின்னும் கூறப்படுவதால் மற்றவை வேண்டாமெனச் சிலர் கொள்கை. சிலரோ அங்கன்யாஸ கான் யாஸாதிகளுடன் பல தியான சுலோகங்களையுங் கூறுகின்றனர். காலையில் நின்றுகொண்டு முகத்திற்கு நேராகக் கைைைதூக்கி வைத்துக்கொண்டு கிழக்குமுகமாக ஜபிக்கவேண்டும். உததமம் ஆயிரத்தெட்டும் மத்யமம் நூற்றெட்டும். அதற்குக் குறைந்தது அதமமெனவுங் கூறப்படுகிறது. ருத்ராக்ஷம், துளசி, தாமரை, மணி, முதலியவைகள் எண்ணுவதற்குச் சிலாக்கியமானவை. எண்ணிக்கையில்லாமல் ஜபிப்பது வீணாகும். (இது மிகப்ரதான மானதால் இதைப்பற்றியும் விஸ்தாரமாக நித்யோபாஸநம் என்ற நூலில் வருவதை நேயர்கள்பார்த்து பயன்பெறவேண்டுகிறேன்) அநவரதம் அலைந்து திரியும் மநதிற்கு ஓய்வையும் பிராமண்யத் தையும் அளிக்கும் இம்மந்திர ரத்நத்தை முடிந்தவரை விடாது ஜபித்து இஹ பர பலனைப் பெருவது நம்கடமை.

## உபஸ்தாநம்

பின்னற் பிராணாயாமம் செய்து உபஸ்தாநமந்திரத்தை ஜபிக்க வேடுண்ம். மித்ரன், வருணன், என்ற தேவர்களைத்துதித்து நமக்கு ஸகல ஸம்பத்தையுமளிக்கும்படி பிரார்த்திக்கிறோம். முதலில் வேதமந்திரங்களால் வழிப்பட்டுப் பிந்தித் தேவர்களையும், சூர்ய மண்டலத்திலுள்ள மஹாவிஷ்ணுவையும், ஸர்ப்ப தேவர்களையும், நமஸ்கரித்து ஸ்ரீ நாராயணனிடம் எல்லாக்கர்மாவையும் ஸமர்ப் பணம்செய்து ஸந்தியா ஜபங்களைப் பூர்த்திசெய்யவேண்டும்.

வெ ஸோமதேவசர்மா.

# தர்மசாஸ்திரத்தின் மகிமை.

மநு धर्मशास्त्रमधीयानो ब्राह्मणस्संशितव्रतः ।
मनोवाग्देहजैर्नित्यं कर्मदोषैर्न लिप्यते ॥

தர்மஶாஸ்த்ரமதீயாநோ ப்ராஹ்மணஸ்ஸம்ஶிதவ்ரத: ।
மநோவாக்தேஹஜைர்நித்யம் கர்மதோஷைர்ந லிப்யதே ।

தர்மசாஸ்திரத்தை தினமும்பயபக்தியுடன் ஓதும்வேதியன்மனது வாக்கு தேகம் இவைகளாலேற்பட்ட தோஷங்களால் தொடப்படமாட்டான் என்றார். இதன்காரணம் இது, தினமும்பயபக்தியுடன் படிப்பவனென்றதனால் அவன் ஒருபோதும் பாபம்செய்யத் துணியவேமாட்டான். ஒரு சமயம் பாபம் நேர்ந்தால் அதுதவறுதலால்தானேற்பட்டிருக்குமாதல்பற்றி அப்பாபம் அவனிடம் ஒட்டாதென்பது கருத்து. அத்தகைய வேதியன்தான் ஹவ்யகவ்யங்களுக்குத்தகுந்தபாத்திரம். அவன் பூமிக்கே பதியாகலாம். அவன் ப்ரும்மலோகத்தையடைவான். பரலோகம் உண்டென்று எண்ணமுள்ள கற்றறிந்த பிராமணன் பிரதிதினமும் தர்மசாஸ்திராத்யயனம் செய்தும் சிஷ்யர்களுக்கும் நன்கு ஞானம் உதிப்பதற்காக உபதேசிக்கவேண்டும் என்கிறார். மற்றுமத்தர்மசாஸ்திரத்தைப் பிராமணன் க்ஷத்திரியன் வைசியன் ஆகிய மூவரும் அத்தியயனம் செய்யவேண்டும். அதனால் அவனது பிதுருக்கள் கரையேறுகின்றனரென்றும் கூறுகின்றனர். இந்திரியம் மனது இவைகளின் கலக்கத்தால் கெட்டமார்க்கத்தில் செல்கிறவர்களுக்கு வ்யாதிக்கு மருந்துபோல் இந்த அத்யயனம் மிக உபயோகமுள்ளதென்கிறார். சுருதியும்ஸ்மிருதியும் வேதியனுக்கு இருகண்களென்றும் அவர்கள்தான் நியாயமார்க்கத்தில் நடப்பார்களென்றும் அவையில்லாதவர்களின் கதியைக் கூறவும்வேண்டுமோவென்கிறார். சங்கரும் லிகிதரும் ராகம் த்வேஷமென்னும் நெருப்பால் எறிக்கப்பட்டு அஞ்ஞானமென்னும் விஷத்தைக்குடித்தவர்களுக்கு தர்மசாஸ்திரம்தான் ஸித்தௌஷதம் என்றார்கள். ஸ்மிருதிரத்னவளியில்:—

स्मृतिं विना न हि ज्ञानं धर्मस्य भवति क्वचित् ।
न जातु ज्ञायते रूपमालोकेन विना यथा ॥

ஸ்ம்ருதிம் விநா நஹி ஜ்ஞாநம் யத்ர்யஸ்ய பவதி க்வசித் ।
நஜாதுஜ்ஞாயதே ஸம்யக்வர்ணோ வேதோ ந விநா யயா ॥

தர்மத்தை அறிவதற்கு ஸ்மிருதியில்லாமல் வேறொன்றுலுமேற் படாது. வெளிச்சமில்லாமல் ரூபத்தைப் பார்க்கமுடியுமாவென் கிறார். யாக்ஞவல்கியர்:— புராணம் நியாயம் மிமாம்ஸை தர்ம சாஸ்திரம் அங்கங்கள் 6 வேதங்கள் 4 ஆகிய 14ம் ஞானஸ்தானங் கள் தர்மத்திற்கும் ஸ்தானம் என்றார். இதனால் ஞானமென்றால் ஆஸ்திக்யஞானமென்றும் அவ்வறிவைப் புகட்டுவது முற்கூறிய 14 தானென்றும் அவைகளே தர்மத்திற்கு ஸ்தானமென்றும் தெளிவாய்க்கூறினர். இதனால் தர்மசாஸ்திரம் அவசியம் அத்யய னம் செய்யத்தக்கதென்றாயிற்று, அதுவும்மூவருணத்தவர்களால் மட்டிலுமே, ஏனெனில், வேதாதிகாரமுள்ளவர்கள், அம்மூவரே. ஆதல்பற்றி வேததர்மத்தைத் தெளிவாய் எடுத்துரைக்கும் தர்ம சாஸ்திரமும் அவ்வாறே. மனு:—

निषेकादिश्मशानान्तो मन्त्रैर्यस्योदितो विधिः ।
तस्य शास्त्रेऽधिकारोऽस्मिन् ज्ञेयो नान्यस्य कर्हिचित् ॥

நிஷேகாதிஶ்மஶாநாந்தோ மந்த்ரைர்யஸ்யோதிதோ விதி: ।
தஸ்ய ஶாஸ்த்ரேऽதிகாரோऽஸ்மிந் ஜ்ஞேயோ நாந்யஸ்ய கர்ஹிசித் ॥

நிஷேகம் முதல்முதுகாடுமுடிய எவனுக்கு மந்திரத்தோடு விதி கூறப்பட்டிருக்கிறதோ அவனுக்கு இந்த சாஸ்திரத்தில் அதிகா ரம்உண்டு. மற்றவர்களரல் அறியத்தக்கதல்ல என்று இதனல் நான்காம்வருணத்துக்கு மந்திரமில்லாமலே எல்லாக்ரியையும் உண்டென்பதாயிற்று. ஆதல்பற்றியே மனு:—

स्वस्वजातेर्हि यत्कर्म कथितं तेन वर्तयेत् ।
अन्यथा वर्तमानो हि सत्यं पतति जातितः ॥

ஸ்வஸ்வஜாதேர்ஹி யத்கர்ம கதிதம் தேந வர்தயேத் ।
அந்யதா வர்தமாநோ ஹி ஸத்யம் பததி ஜாதித: ॥

தன்தன் ஜாதிக்கு எவ்வெவ்விதம் கர்மா ஏற்பட்டிருக்கிறதோ அவ்விதமே நடக்கவேண்டும். மாறினல் கண்டிப்பாய் ஜாதியை இழந்தவனுவான் என்றார். இனிபிரகிருதமில்லாத இதனை விடுத்து வழியிற்செல்வாம். இனி ஸ்மிருதிகளுக்குமேன்மை இதனலேற்

பட்டது, அதிலும் மனுஸ்மிருதி மிகமேலானது. அங்கிரஸ்-மனுவால் முதலில் எந்தர்மசாஸ்திரம் மேலாகக்கூறப்பெற்றதோ அத்தகைய மனுசாஸ்திரத்தைத்தவிற வேறு நன்மைபயக்கக் கூடியதொன்றுமில்லை. ஏனெனில் வேதத்தினின்றுமே எடுக்கப் பெற்றதால்தான் இதனால் மனுவின் அர்த்தத்திற்கு விரோதமாய் இருக்கிற ஸ்மிருதி யாவற்றும் விலக்கத்தக்கது. சுருதியும் மனு சொன்னதெல்லாம் அல்பமாயினும் அதுஸித்தௌஷதம்என்கிறது. ஆகையால் மனுதர்மத்தை முக்கியமாகவும் அவ்விதமேமற்றதர்ம சாஸ்திரங்களையும் அவசியம் வேதியன் கற்றிருக்கவேண்டியது. அவ்விதமில்லாத பிராமணனுக்குச் செய்யும் தானம்முதலியவை கூட வீண்என்றே அபிப்பிராயப்படுகின்றனர். விஷ்ணுவும் புராணமும் மனுதர்மசாஸ்திரமும் அங்கங்களோடுகூடிய வேதங்களும் அயுர்வேதமும் ஆகிய நான்கும் எனதுகட்டளை. இதைக்காரணவாதங்களால் மறுக்கக்கூடாதென்கிறார். வேதங்களுக்குப் பிரமாணமின்மையையும் ரிஷிகள் கூறப்பட்ட தர்மசாஸ்திரங்களை நம்மைப்போலுள்ளவர்கள் கூறியதென்றும் அங்குமிங்கும்போகக்கூடாது கண்டதையெல்லாம் புசிக்கக்கூடாதென்று வியவஸ்தையெல்லாம் கட்டுப்பாடென்றும் கூறுபவன் நாசமடைவான் என்று வஸிஷ்டர் கூறினர். வ்யாஸர் ஸ்மார்த்தானுஷ்டானமில்லாமல் வைதிகானுஷ்டானமென்பது தனிமையாய் இல்லாததால் கர்மத்தினால் ஸித்திபெற விரும்புகிறவர்கள் அவசியம் தர்மசாஸ்திரம் கற்கவேண்டுமென்றார். ஆனால் தர்மசாஸ்திரமென்று சொல்லப்படும் கிரந்தம்யாவும் கிரஹிக்கத்தக்கவையே என்றால் இல்லையென்று முன்னற்கூறினோம். ப்ரசேதஸ் என்பவரும் வேதத்திற்குப்புறம்பான எந்தசாஸ்திரம் எக்கன்மம் செய்யச்சொன்னாலும் அது நமக்குப் பிரமாணமாகாது. ஏனெனில் அவைவேதத்திற்குப் புறம்பானவை என்கிறார். இதை சதுர்விம்சதி மதக்காரர் விளக்கிக் கூறிவிட்டனர். ஆர்ஹதன் சார்வாகன் பௌத்தன் முதலியவர்களால் கூறப்பெறும் தர்மமென்பவை மோசமானது. ஆகையால் அவைகளை நம்பக்கூடாது என்று சொன்னார். ஆகவே இவ்விதம் ஸ்மிருதியென்று எல்லாவற்றையும் நம்பிவிடாமலும் ஸ்மிருதி இல்லையோவென்றுவேதவிஹிதமான சாஸ்திரத்தைத்தள்ளிவிடாமலும் குருவின் வாக்கியத்திலடங்கி தர்மதத்வங்களை மூவருணத்தவரும் அறியவேண்டும். இனி அடுத்து நமக்கு ஏற்படும் சங்கை

ஒன்றுளது. அதாவது இப்போது நாம் கடைத்தேற அனுஷ்டிக்கும் கன்மானுஷ்டானத்திற்கு சுருதிமுதற்பிரமாணம். இரண்டாவது ஸ்மிருதிஎன்றேற்பட்டது. அத்தகைய முதற்பிரமாணமான சுருதியிலேயே ஒருதர்மத்தை அனுஷ்டிக்கும் முறையை வெவ்வேறுவிதமாய்க் கூறிவிட்டால் அப்போது எதை அனுஷ்டிக்கிறது எதை விடுகிறதென்று இதற்கு இப்போது அவசியம் பதிற்கூறவேண்டுமாதல்பற்றி அதிலிறங்குவாம்.

சுருதிமுதலியவைகளின் பலாபலநிரூபணம்.

மனு श्रुतिद्वैधं तु यत्रस्यात् तत्र धर्मावुभौ स्मृतौ ।
उभावभिहितौ धर्मौ सम्यगुक्तौ महर्षिभिः ॥

𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌦𑍍𑌵𑍈𑌧𑌂 𑌤𑍁 𑌯𑌤𑍍𑌰𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌤𑌤𑍍𑌰 𑌧𑌰𑍍𑌮𑌾𑌵𑍁𑌭𑍌 𑌸𑍍𑌮𑍃𑌤𑍌 ।
𑌉𑌭𑌾𑌵𑌭𑌿𑌹𑌿𑌤𑍌 𑌧𑌰𑍍𑌮𑍌 𑌸𑌮𑍍𑌯𑌗𑍁𑌕𑍍𑌤𑍌 𑌮𑌹𑌰𑍍𑌷𑌿𑌭𑌿𑌃 ॥

சுருதியில் ஒருதர்மத்தை இருவகையாகக்கூறப்படின் அவ்விரண்டும் தர்மம்தான். அவ்விதமே மகரிஷிகள் ஒப்புக்கொண்டிருக்கின்றனர் என்றார். ஆனால் விரோதமான இரண்டை எவ்விதமனுஷ்டிக்கமுடியும், உதாரணமாக உதயத்திற்குப்பிறகு அக்னிஹோத்திரம் செய்யவேண்டுமென்றும் சுருதி கூறுகிறது. உதயத்திற்குமுந்தியே அக்னிஹோத்திரம் செய்யவேண்டுமென்றும் சுருதியே கூறுகிறது. இரண்டையும் ஒரேயஜமானன் இருதடவை செய்கிறதாவென்றால் அவ்விதமில்லை. அங்குஸுமந்து கூறும்விதத்தைகவனிக்கவேண்டும். ஸுமந்து:—

यत्र शास्त्रगतिर्भिन्ना सर्वकर्मसु भारत ।
उदितेऽनुदितेचैव होमभेदो यथा भवेत् ॥
तस्मिन्कुलक्रमायातमाचारं चाचरेद्द्विजः ।
स गरीयान्महाबाहो सर्वशास्त्रोदितादपि ॥

𑌯𑌤𑍍𑌰 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌗𑌤𑌿𑌰𑍍𑌭𑌿𑌨𑍍𑌨𑌾 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌸𑍁 𑌭𑌾𑌰𑌤 ।
𑌉𑌦𑌿𑌤𑍇𑌽𑌨𑍁𑌦𑌿𑌤𑍇𑌚𑍈𑌵 𑌹𑍋𑌮𑌭𑍇𑌦𑍋 𑌯𑌥𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥
𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌕𑍁𑌲𑌕𑍍𑌰𑌮𑌾𑌯𑌾𑌤𑌮𑌾𑌚𑌾𑌰𑌂 𑌚𑌾𑌚𑌰𑍇𑌦𑍍𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 ।
𑌸 𑌗𑌰𑍀𑌯𑌾𑌨𑍍𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌸𑌰𑍍𑌵𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍋𑌦𑌿𑌤𑌾𑌦𑌪𑌿 ॥

எங்கு கர்மாக்களில் உதயத்திற்குப்பிறகு ஹோமம்செய்யலாம் உதயத்திற்குமுன் ஹோமம் செய்யலாமென்பதுபோல் பேதமா

கக்கூறுகின்றதோ அங்கு குலக்ரமானுஷ்டானம் எதாவதொன்றில்தானிருக்கும் ஆகவே அந்த ஆசாரத்தை அனுஷ்டித்தால் மேன்மையாகும். இதுதான் ஸமஸ்த சாஸ்திரங்களின் ஸித்தாந்தம் என்றார். இங்கு குலக்கிரமமென்றால் கேவலம் நமதுமூதாதைகளைமட்டிலும் பிரமாணமாய்க் கொள்கின்றனர். மற்றும்சிலர் வேதியர்கட்குள்ளிருக்கும் அவாந்தர பேதங்களாலேற்பட்டவையென்கிறார். இதெல்லாம்இல்லை. குலமென்றால் கோத்திரமென்று இங்குபொருள் கொள்ளல்வேண்டும். சுருதிஸ்மிருதிகளாலேயே இரண்டுவிதம் கூறப்பட்டிருக்கவேண்டும். அங்கு குலாசாரம் கவனிக்கத்தக்கதென்றாலே இப்போது இது எங்கள் குலதர்மமென்று சுருதிஸ்மிருதிகளில் இல்லாததையெல்லாம் வைத்துக் கொண்டாடுவது அசாஸ்திரீயம்,பலனுமில்லையென்றேற்படுகிறது.

येनास्य पितरो याता येन याताः पितामहाः ।
तेन यायात् सतां मार्गं तेन गच्छन् नरिष्यति ॥

𑌯𑍇𑌨𑌾𑌸𑍍𑌯 𑌪𑌿𑌤𑌰𑍋 𑌯𑌾𑌤𑌾 𑌯𑍇𑌨 𑌯𑌾𑌤𑌾𑌃 𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌾𑌃 ।
𑌤𑍇𑌨 𑌯𑌾𑌯𑌾𑌤𑍍𑌸𑌤𑌾𑌂 𑌮𑌾𑌰𑍍𑌗𑌂 𑌤𑍇𑌨 𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌨𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ।

எம்மார்க்கமாய் நம்பிதாவும் பாட்டனும் சென்றனரோ ஸாதுக்களால் நடத்தப்பட்ட அம்மார்க்கத்தையே நாமும்பின்பற்றவேண்டும் என்ற ந்யாயத்தைவிட்டு வழுவாமல்மட்டிலும்வந்தால் நமது அனுஷ்டானம் ஒருநாளும் அவைதிகமாய் நேர்ந்திராது. இவ்விதம் வேதத்தில் இரண்டுவிதியாக ஒரேவிஷயத்தில் வந்திருந்தால் யாருக்கு எம்மாதிரி அனுஷ்டானமோ அம்மாதிரி அனுஷ்டிக்கவேண்டுமென்றாயிற்று. இனி ஸ்மிருதிகளில் இவ்விதம் இருவிதிகளேற்பட்டால் அங்கு எவ்விதமெனச் சங்கைநிகழ அதை விளக்குகின்றார். இரண்டும் ஸமானபலமுள்ளதாய் இருந்தால் இரண்டும் குலாசாரம்போலனுஷ்டிக்கத்தக்கதே என்றார். இனி ஸ்மிருதியென்பது வேதத்தின் பிரமாணத்தை,வைத்துக்கொண்டே வந்திருக்கிறதென்று கீழ்க்கூறப்பெற்ற ஸித்தாந்தத்தால் அவ்விரண்டிற்கும் விரோதம்நேரின் சுருதியை அனுஷ்டிக்கிறதா. ஸ்மிருதியையா என்றால், இதைக்கவனிப்பாம்.இங்குஉதாரணமாய் இதைக்கூறி அங்கிருந்து ஸித்தாந்தம் பெறலாம். யாகசாலையில் ஸதஸ்

என்னும் மண்டபத்தின் மத்தியில் ஓர் அத்திக்கொம்பு ஸ்தம்பமாய் நட்டிருக்கும். அதற்கு வஸ்திராலங்காரம் செய்யும்படி கூறும் ஸ்மிருதி. அத்திக்கொம்பு முழுமையும் வஸ்திரத்தால் மூடத்தக்கதென்று கூறுகின்றது. நமது ஸ்மிருதியெல்லாம் வேதப்ரமாணமுள்ளதாதலால் இத்தகைய ஸ்மிருதிக்கும் வேதமூலமிருக்கவேண்டும். இதே பிரகாணத்தில் சுருதியிலோ அத்திக்கொம்பைத் தொட்டுக்கொண்டு உத்காதாகானம் செய்யவேண்டுமென்று கூறுகின்றது. ஸ்மிருதி ரீதியாய் அத்திக்கொம்பை வஸ்திரத்தால் முழுமையும் மூடிவிட்டால் தொட்டுக்கொண்டு கானம் செய்யவேண்டுமென்ற சுருதிக்கு அர்த்தம் கிடைக்காது. சுருதிப்படி செய்தால் அத்திக்கொம்பு முழுமையும் என்ற ஸ்மிருதி ஓவ்வாது. ஆகவே இரண்டிற்கும் விரோதமே என்றால் விரோதம் தான், இங்கு ஸமாதானம் இவ்விதம் கூறுகின்றது இரண்டும் பிரமாணமேயாயினும் ப்ரத்யக்ஷமாய் சுருதியானது தொடும்படி விதிப்பதால் முழுமையும் சுற்றும்படி விதிக்கும் ஸ்மிருதிக்குப் பிரமாணமான சுருதி அப்பிரத்யக்ஷமாய் இருப்பதால் சுருதிப்பிரகாரமே நடத்தவேண்டுமென்று இவ்விதமே ஸங்கிரககாரர்

श्रुतिस्मृतिपुराणेषु विरुद्धेषु परस्परम् ।
पूर्वं पूर्वं बलीयस्स्यात् इति न्यायविदो विदुः ॥

ஶ்ருதிஸ்ம்ருதிபுராணேஷு விருத்தேஷு பரஸ்பரம் ।
பூர்வம்பூர்வம்பலீயஸ்ஸ்யாத் இதி ந்யாயவிதோ விது: ॥

சுருதிஸ்மிருதி புராணம் இவைகளுக்குள் ஒன்றுக்கொன்று விரோதமாய் இருந்தால் முன் முன்உள்ளது பிரமாணம் என்றார். சதுர்விம்சதிமதகாரர் ஸ்மிருதிக்கு வேதத்தோடு விரோதம் நேருமிடத்தில் எப்படிஸ்மிருதி தள்ளப்படுகிறதோ அப்படியேஸ்மிருதிக்கு நேர் விரோதமான லௌகிகவாக்கியம் ஸ்மிருதிவிரோதமானதால் விலக்கத்தக்கது என்றார். வ்யாஸர் ஒரு தர்மத்தை மற்றோர் தருமம் கெடுத்தால் அது தர்மமாகாது. ஒன்றுக்கொன்று விரோதமில்லாமல் பிரவர்த்திப்பதுதான் தர்மம். (தொடரும்)

M. N. சுப்ரம்மண்ய சாஸ்திரி